# இலங்கையின் தேர்தல் ஆணைக்குழுவின் கட்டமைப்பும், தொழிற்பாடும் : ஒரு விபரண ஆய்வு

**டிலக்சன், சு., திருச்செந்தூரன், சி.**
அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
diluxan1121@gmail.com.

*இலங்கையில் தேர்தல் விடயங்களுக்கு பொறுப்பாக தேர்தல் திணைக்களம் 1955 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இருந்த போதிலும் தேர்தல் திணைக்களத்தில் காணப்பட்ட குறைபாடுகளின் நிமித்தம் 2015 ஆம் ஆண்டு பத்தொன்பதாவது சீர்திருத்தமானது சுயாதீனமான தேர்தல் ஆணைக்குழுவினை உருவாக்கியது. இது பல அதிகாரங்கள் மற்றும் கடமைகளை பெற்றிருப்பதுடன் ஆணைக்குழுவின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் நாட்டில் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கான சூழலை உருவாக்கி இருந்தது. பத்தொன்பதாவது சீர்திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட தேர்தல் ஆணைக்குழுவானது இலங்கை மக்களுக்கு தேர்தல் விடயங்கள் தொடர்பான ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது என்றே கூற வேண்டும். ஏனெனில் இந்த ஆணைக் குழுவினுடைய சுயாதீனத்தன்மை என்பது சட்டரீதியாக உறுதிப்படுத்தப்பட்டு இருந்தது. ஆனால் இதனைத் தொடர்ந்து அரசியல் யாப்பில் கொண்டுவரப்பட்ட இருபதாம் சீர்திருத்தம் மற்றும் இருபத்தோராம் சீர்திருத்தம் போன்றன தேர்தல் ஆணைக்குழுவினுடைய சுயாதீன தன்மையினை கேள்விக்குள்ளாக்கியிருந்தது. இது ஒரு நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் முறைமை ஒன்றினை நாட்டில் முன்னெடுப்பதற்கு தடையாக இருந்துள்ளது. எனவே இந்த ஆய்வின் ஊடாக நாம் தேர்தல் ஆணைக்குழுவின் சமகால கட்டமைப்பு மற்றும் தொழிற்பாடுகளை அடையாளம் செய்வதன் ஊடாக அதில் இருக்கின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு எவ்வாறான சட்டரீதியான ஏற்பாடுகளை நாம் முன்னெடுக்க முடியும் என்பதனை அடையாளம் காணலாம். மேலும் தேர்தல் ஆணைக்குழுவின் உடைய கட்டமைப்பு மற்றும் தொழிற்பாடுகளை பலப்படுத்துவதுடன் அதன் மீதான அரசியல் தலையீடுகளை இல்லாதொழித்து நாட்டில் தேர்தல் செயன்முறைகளின் ஊடாக ஜனநாயகத்தினை கட்டியெழுப்பி பிரதிநிதித்துவ ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்கின்ற ஒரு நாட்டினை எவ்வாறு கட்டியெழுப்பலாம் என்பதை மையமாகக் கொண்டு இந்த ஆய்வு அமைந்துள்ளது.*

**திறவுச்சொற்கள் :** ஜனநாயகம், அரசியலமைப்புச் சீர்திருத்தம், சுதந்திரம், இறைமை, அரசாங்கம்.